2012 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

ஆய்வு மாளிகை

***5988—திரு. கே.சி. வீரமணி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் ஆய்வு மாளிகை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் ஆய்வு மாளிகை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி மலையில் இரண்டு அறைகளுடன்கூடிய ஆய்வு மாளிகை கட்டும் திட்டத்திற்கான மதிப்பீடு முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் ஆகியோரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. அரசின் அனுமதி பெற்று இந்தப் பணி நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.*

திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலைகடலென ஆர்ப்பரித்து எழுகின்ற தமிழர் நெஞ்செல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் இதய தெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, எளியோரையும், வலியோராய் மாற்றி வரையில்லா திட்டங்களை வாரி வழங்கும்*

எங்கள் அம்மாவே, தங்கள் பொற்பாதங்களுக்குப் பணிவான வணக்கத்தினை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கக்கூடிய எழில்மிகு ஏலகிரி மலைக்கு, பொதுப் பணித் துறையின்மூலம் ஆய்வு மாளிகை கட்டித்தர உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும், என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய நீராதாரத்தினைப் பெருக்க வேண்டும்; மழை நீரைச் சேகரிக்க வேண்டுமென்ற நல்ல ஒரு ஆலோசனையை வழங்கி, அதை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அதற்கு ஏற்றாற்போல், மதுரை புறநகர் மாவட்டம், சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட சாத்தையாறு அணையைத் தூர் வாரக்கூடிய ஒரு நிலை இருக்கின்றதா என்பதற்கான மாண்புமிகு அமைச்சரின் பதிலைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மூலக் கேள்விக்குத் தொடர்பு இருப்பதுபோல் கேள்வி கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய சொந்த ஒன்றியம். அந்த ஒன்றியம் 49*

2012 பிப்ரவரி 4]

சிற்றூராட்சிகளைக் கொண்ட ஓர் ஊராட்சி ஒன்றியமாகும். கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு அமைச்சர் பெருமக்களோ அல்லது உயர் அதிகாரிகளோ ஆய்வுப் பணிக்கு வரும்பொழுது அங்கே தங்கவேண்டுமென்று சொன்னால், மன்னார்குடி அல்லது திருத்துறைப்பூண்டி ஆகிய இரண்டு ஊர்களில்தான் தங்கவேண்டிய சூழல் இருக்கிறது. ஆகவே, கோட்டூர் ஊராட்சியில் ஓர் ஆய்வு மாளிகை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், உடுமலைப்பேட்டையிலே உள்ள ஆய்வு மாளிகையானது மிகவும் பழமைவாய்ந்த ஆய்வு மாளிகையாக உள்ளது. அதைப் புதுப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதோடு, புதிதாக உருவாக்கப்பட்ட மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலும் ஓர் ஆய்வு மாளிகை பழுதடைந்த நிலையில் உள்ளது; அதையும் புதுப்பிக்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதற்கு மாண்புமிகு அமைச்சரின் பதிலைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளத்திலே உள்ள ஆய்வு மாளிகையைப் புதுப்பிக்கும் பணி, இந்த நிதியாண்டிலே நடைபெறும் என்பதையும், மறுபடியும் புதியதொரு ஆய்வு மாளிகை கட்ட சாத்தியம் இருந்தால் பரிசீலிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2012 பிப்ரவரி 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.*

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலே புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிற குடிமங்கலம் ஒன்றியத்திற்கு வருகின்ற அரசு அலுவலர்கள் தங்குவதற்கென்று எந்தத் தனியார் விடுதியும் கிடையாது. அரசின் சார்பாக, பொதுப் பணித் துறையின் சார்பாக புதிதாக ஓர் ஆய்வு மாளிகையை, குடிமங்கலம் ஒன்றியத்தில் பெதப்பம்பட்டியிலே அமைத்துக் கொடுக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகள் இருப்பின் அந்த ஆய்வு மாளிகை கட்டும் திட்டம், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள்.*

திரு. வி.பி. கலைராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு பகுதி அரசியலில் மிக விழிப்புணர்வு பெற்ற பகுதி. அங்கே இப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அற்புதமான. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கலைராஜன், தி.நகரிலிருந்து ஒரத்தநாட்டிற்கு எப்போது சென்றீர்கள்?*

திரு. வி.பி. கலைராஜன்: *கால்நடை மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இவ்வளவு நீண்ட* long jump *செய்திருக்கிறீர்கள்; சரி, கேளுங்கள்.*

2012 பிப்ரவரி 4]

திரு. வி.பி. கலைராஜன்: அது நான் பிறந்த மண். அங்கே கால்நடை மருத்துவக் கல்லூரியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களையெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்திலே ஆழ்த்தியிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கு ஒரு கல்லூரி இருக்கிறது. ஆனால், அந்த ஒரத்தநாடு நகரத்திலே, இன்னும் சொல்லப்போனால் யாரும் தங்குவதற்கு ஒரு விடுதிகூட இல்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே அங்கே ஓர் ஆய்வு மாளிகையைக் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதையும், சாத்தியக்கூறு இருப்பின் அந்தப் பணி நிறைவேறும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

முற்பகல் 10–15

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த புண்ணிய பூமியான காஞ்சிபுரத்திலே சுற்றுலா மாளிகை ஒன்று உள்ளது. அந்தச் சுற்றுலா மாளிகையிலே போதிய அறைகள் இல்லை. ஆகையாலே அங்கே ஒரு கூடுதல் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 பிப்ரவரி 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக உருவாக்கப்பட்ட என்னுடைய ஆம்பூர் தொகுதியிலே ஆய்வு மாளிகையைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே புதியதாக ஆய்வு மாளிகைகளைக் கட்டவேண்டுமென்று கேட்பார்கள்போலத் தெரிகிறது. எனவே, சாத்தியக்கூறு இருப்பின், உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் என்ன சொல்கிறார் என்றால்,* if there is possibility, *அதாவது வாய்ப்பு இருந்தால், சாத்தியக்கூறு இருந்தால், ஆய்வு மாளிகை அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)* Please sit down. *திரு. அஸ்லம் பாஷா,* no permission for raising sub question in sub question. *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.*

திரு. மு. ரெத்தினசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இப்போதுவரை, முன் எப்போதும் இல்லாத நிலையாக, காவிரியில் ஜூன் 6 ஆம் தேதி தண்ணீர் திறந்து, பிப்ரவரி 5 ஆம் தேதி வரை நீட்டிப்புச் செய்து தஞ்சாவூர், திருவையாறு வட்டார விவசாயிகளின் எதிர்காலத்தை நலம் பெறச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு விவசாயிகளின் சார்பாக கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடி செய்ய, இன்னும் இரண்டு மாத காலங்களுக்கு உய்யகொண்டான், கட்டளைக் கால்வாய்களிலே நீர்வரத்து தேவைப்படுவதால் அந்த இரண்டு கால்வாய்களிலும் நீர்வரத்தை நீட்டிப்புச் செய்து விவசாயிகளைக் காப்பாற்ற முடியுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2012 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெத்தினசாமி, இந்த வினா ஆய்வு மாளிகையைப் பற்றியது.* Please sit down. *நான் இன்னும் உங்கள் வினாவிற்கு வரவில்லை. வினா எண் 41—ஐத்தான் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். நீங்கள் அதற்குள் ஏன் எழுந்தீர்கள்? இந்தக் கேள்வியில் துணைக் கேள்வியைக் கேட்பதற்குத்தான் உங்களை அனுமதித்தேன். என்னைப் பாருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள்.*

அடுத்து, வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

41—

சுற்றுலாத் தலம்

***6188—திரு. மு. ரெத்தினசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, கல்லணைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அவைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.*

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, கல்லணை மேம்பாட்டிற்காக மாநில நிதிமூலம் கல்லணை சுற்றுலாத் தலத்தில் கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ரூபாய் ஒரு கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் குடிநீர் வசதி, ஓய்வறை, மின் விளக்கு வசதி, விளம்பரப் பலகைகள், நிலச் சீரமைப்பு, கழிப்பிட வசதி, நடைபாதை, அணுகுசாலை, வாகன நிறுத்துமிடம், பாதுகாப்புக் கைப்பிடி மற்றும் பொருட்கள் வைப்பறை போன்ற பணிகள் முடிக்கப்பட்டு, தற்பொழுது அது சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிலே உள்ளது என்பதையும், 2011-2012 ஆம் நிதியாண்டில் கல்லணைப் பகுதியில் இசை நீரூற்று, குழந்தைகள்